**கோறளைப்பற்று மேற்கு பிரதேச சபை**
**மட்டக்களப்பு மாவட்டம்**

1. **நிதிக்கூற்றுக்கள்**

1.1 **நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்**

2018 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் மார்ச் 29 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை 2019 ஆம் ஆண்டு மே 08 ஆந் திகதி தவிசாளருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

1.2 **முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து நிதிக்கூற்றுக்களில் 2018 ஆம் ஆண்டு திசெம்பர் 31 இல் பிரதேச சபையின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றிலினையும் இலங்கை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

1.3.1 கணக்கீட்டு கொள்கைகள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களில் கணக்கீட்டு கொள்கைகள் வெளிப்படுத்தப் பட்டிருக்கவில்லை. | நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது எந்த கணக்கீட்டு கொள்கைகளின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டது என்பன வெளிப்படுத்தப்பட வேண்டும். | ஏற்றுக் கொள்ளப்பட்டது |

1.3.2 நிதிக்கூற்றுக்களின் மீதான கருத்துரைகள்

1.3.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டு குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் நிலுவை வீத வரிகளின் தொகை முறையாக கணிப்பிடப்பட்டு கணக்குகளுக்கு கொண்டுவரப்படாது நிலுவை பூச்சியமாக காட்டப்பட்டுள்ளது. | பிரதேச சபையின் நிலுவை வீதவரி முறையாக கணிப்பீடப்பட்டு கணக்குகளுக்கு கொண்டுவரப்பட வேண்டும். | ஏற்றுக் கொள்ளப்பட்டது. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2016 மற்றும் 2017 சோலைவரி நிலுவைகள் கணிப்பிடப்பட்டு கணக்குக்கு கொண்டு வரப்பட்டிருக்கவில்லை. | நிலுவைகள் கணக்கில் கொண்டுவரப்பட வேண்டும். | எதிர் காலத்தில் மேற்படி தவறு இடம்பெறா வண்ணம் நிவர்த்தி செய்யப்படும். |
| (இ) | முத்திரை தீர்வையானது முறையாக கணிப்பீடு செய்யப்பட்டு நிதிக்கூற்றுக்களின் முத்திரை தீர்வையாக கொண்டுவரப்பட்டிருக்கவி ல்லை. | முத்திரை தீர்வையானது கணீப்பபீடு செய்யப்பட்டு நிதிக்கூற்றுக்களுக்கு காட்டப்பட வேண்டும். | எதிர் காலத்தில் மேற்படி தவறு இடம்பெறா வண்ணம் நிவர்த்தி செய்யப்படும். |
| (ஈ) | வாகனங்கள் வண்டிகளின் பெறுமதிகள் 05 ஆண்டுகளுக்கு மேலாக கணிப்பிடப்படாது அல்லது மீள்மதிப்பிடப்படாது கணக்குகளில் ரூபா 62,315,478 தொகையாக காட்டப்பட்டுள்ளது. | சபைக்கு சொந்தமான வாகனங்கள் மற்றும் வண்டிகளின் பெறுமதி மீள் மதீப்பீடு செய்யப்பட்டு கணக்குகளுக்கு காட்டப்பட வேண்டும். | எதிர் காலத்தில் மேற்படி தவறு இடம்பெறா வண்ணம் நிவர்த்தி செய்யப்படும். |
| (உ) | காணிகட்டிடங்களின் கூட்டு மொத்தப் பெறுமதி ரூபா 35,936,292 தொகையாக கணக்குகளில் 10 ஆண்டுகளுக்கு மேலாக மீள்மதிப்பிடாது காட்டப்பட்டுள்ளது. | காணிகட்டிடங்களின் கூட்டு மொத்த பெறுமதி மீள் மதிப்பீடு செய்யப்பட்டு கணக்குகளுக்கு காட்டப்பட வேண்டும். | எதிர் காலத்தில் மேற்படி தவறு இடம்பெறா வண்ணம் நிவர்த்தி செய்யப்படும். |
| (ஊ) | மீளாய்வாண்டில் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் நிதியில் கொள்வனவு செய்யப்பட்டு கணனித் தொகுதிகள் மற்றும் போட்டோ பிரதி இயந்திரம் போன்றவை கணக்குகளுக்கு கொண்டு வரப்பட்டிருக்கவில்லை. | குறிப்பிட்ட தேவைகளுக்காக கொள்வனவு செய்யப்பட்ட காணித் தொகுதி மற்றும் போட்டோ பிரதி இயந்திரம் அத் தேவைகளுக்காக மாத்திரம் பயன்படுத்தப்பட வேண்டும். | எதிர் காலத்தில் மேற்படி தவறு இடம்பெறா வண்ணம் நிவர்த்தி செய்யப்படும். |

### 1.3.4 நிகழத்தக்க பொறுப்புகள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | அதனடிப்படையில், பிரதேச சபையினால் | சபையினால் முன்னெடுக்கப்படும் | எதிர் காலத்தில் மேற்படி தவறு இடம்பெறா |

| | | | |
|---|---|---|---|
| | இதற்கான செலவுகள் நிகழத்தக்க பொறுப்பாக கணக்குகளில் காட்டப்பட்டிருக்கவில்லை. | வெளித்தரப்பினருக்கு எதிரான வழக்கு தொடர்பாக தகவல்கள் நிகழத்தக்க பொறுப்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்த வேண்டும். | வண்ணம் நிவர்த்தி செய்யப்படும். |
| (ஆ) | முறிந்து போகும் நிலையில் சபையின் நிதி நிலைமை<br>------------------------------------- | | |
| | சபையின் 2018/2019 ஆம் ஆண்டுக்கான காசு மீதி, வங்கி மீதி, வைப்புக்கணக்கு பாதீடு, வருமானம், செலவு சம்பந்தமான ஆய்வினை மேற்கொண்ட போது 2019 ஆம் ஆண்டில் சபை பாரிய நிதி நெருக்கடிக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளதுடன் சபையினை தொடர்ந்து கொண்டு செல்ல முடியாது இடை நடுவில் இஸ்தம்பிதம் அடைந்து முறிவடையக்கூடிய ஆபத்தான நிலையில் உள்ளது. | சபையின் நிதி நிலமையினை சபை கொன்டு நடத்தக்கூடிய வகையில் சிக்கனமாகவும் விணைத்திறன் மிக்கதாகவும் பயன்படுத்தப்பட வேண்டும். | எதிர் காலத்தில் மேற்படி தவறு இடம்பெறா வண்ணம் நிவர்த்தி செய்யப்படும். |

1.3.5 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்
---------------------------------------------------------------------

| | கணக்காய்வு அவதானிப்புகள்<br>------------------------------- | பரிந்துரை<br>----------- | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை<br>------------------------- |
|---|---|---|---|
| (அ) | பெறவேண்டிய கணக்குகள்<br>------------------------------- | | |
| | நிதிக்கூற்றுக்களில வீதவரிகள் நிலுவையாக ருபா 11,937,904 தொகை தொடர்பில் தொடர்ச்சியாக பத்து ஆண்டுகளுக்கு மேலாக கணக்குகளில் காட்டப்பட்டுள்ள போதிலும், அவை தொடர்பான ஆவணங்கள், பதிவேடு மற்றும் உறுதிப்படுத்தக்கூடிய சான்றுகள் எதுவுமின்றி கணக்குகளில் காட்டப்பட்டு வருவதுடன் நிலுவைகளை அறவிட அல்லது | வீதவரிகள் நிலுவை கணக்குகளில் காட்டப்படுவதோடு அவை தொடர்பான ஆவண சான்று பேணப்படுவதுடன் நிலுவையினை அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஏற்றுக் கொள்ளப்பட்டது. |

| | | | |
|---|---|---|---|
| | ஏடுகளிலிருந்து பதிவழிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | இடமாற்றம் பெற்றுச் சென்ற பதவி வறிதாகியவர்கள் மற்றும் இளைப்பாறிய ஆறு ஊழியர்களுக்கு கடனில் அறவீடு செய்யப்பட வேண்டிய ரூபா 51,626 தொகை 1998 ஆம் ஆண்டிலிருந்து நிலுவையாக காணப்பட்ட போதிலும் அவற்றை அவர்களின் பிணையாளர்களிடமிருந்து அல்லது ஓய்வூதிய தொகையிலிருந்து அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை | நிலவையாகவுள்ள ஊழியர் கடன்களை அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஏற்றுக் கொள்ளப்பட்டது. |
| (இ) | செலுத்த வேண்டிய கணக்குகள்<br>--------------------------------<br>நிதிக்கூற்றுக்களில் கடன் பொறுப்பாக காட்டப்பட்டுள்ள செலவுக் கடன் வழங்குனர் ரூபா 30,629 தொகைகள் ஐந்து வருடங்களுக்கு மேலாக இனங்கண்டு அவற்றை தீர்ப்பதற்கு அல்லது அவற்றை பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | செலவு கடன் வழங்குனர் நிலுவை குறிப்பிட்ட பகாலப்பகுதியில செலுத்தி முடிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஏற்றுக் கொள்ளப்பட்டது. |

1.3.6 ஆவணச்சான்றுகள் இன்மை

----------------------------------

நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்ட பின்வரும் ஒவ்வொரு விடயத்திற்கும் எதிரே சுட்டிக்காட்டப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| கணக்காய்வு அவதானிப்புகள் | | | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- | --- | --- |
| விடயங்கள் | பெறுமதி ரூபா | சான்றுகளின்மை | குறிப்பிட்ட மீதிகளை உறுதிப்படுத்துவதற்காக ஆவணங்கள் இருப்பு பதிவேடுகள் சொத்து பதிவேடுகள் பேணப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்ளப்பட்டது. |
| காணிகளும் கட்டிடங்களும் | 35,936,292 | காணி உறுதி, நிலையான சொத்துப் பதிவேடு | | |
| பொறி இயந்திரம் | 4,242,857 | சொத்துப் பதிவேடுகள் உரிமையை உறுதிப்படுத்தும் ஆவணங்கள் | | |
| மோட்டார் வாகனங்களும் வண்டிகளும் | 62,315,978 | | | |
| மின்சார களஞ்சிய பொருட்களின் இருப்புக்கள் | 1,099,519 | இருப்புப் பதிவேடுகள் | | |
| களஞ்சிய பொருட்கள் | 19,690 | இருப்புப் பதிவேடுகள் | | |
| பொறுப்புக்கள் | 30,629 | செலுத்தவேண்டிய கடன் பதிவேடு | | |

1.4 இணங்காமைகள்

1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மை.

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்கி ஒழுகாத சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | சட்டங்கள்,விதிகள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- | --- | --- |
| (அ) | 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 12(1) மற்றும் (2) ஆம் பிரிவுகள் மற்றும் உள்ளூராட்சி வீடமைப்பு மற்றும் நிர்மாண வேலைகள் அமைச்சினது 1988 சனவரி 13 ஆம் திகதிய 488.∴16 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின் 31(1) ஆம் உப பிரிவு | பிரதேச சபைகளின் நடவடிக்கைகளை இலகுபடுத்தும் நோக்குடன் சரியான தீர்மானங் களை பெற்றுக்கொள்வதற்காகவும் சபையில் நிதி, கொள்கைத் திட்டமிடல், வீடமைப்பு, சமூக அபிவிருத்தி, தொழிநுட்பச் | சபையின் ஒவ்வொரு நடவடிக்கைகளுக்காகவும் வேண்டி தனித் தனி குழுக்கள் நியமிக்கப்பட வேண்டும். | ஏற்றுக் கொள்ளப்பட்டது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | சேவைகள், சுற்றாடல் மற்றும் பொது வசதிகள் போன்ற விடயங்களுக் காக தனித்தனி குழுக்கள் நியமிக்கப்பட்டிருந் த போதிலும், அக் குழுக்கள் கணக்காய்வுத் திகதியான 2019 மே 10 ஆந் திகதி வரை நடாத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்க வில்லை. | | |
| (ஆ) | 1988 ஆம் ஆண்டின் பிரதேச சபைகள் நிதி, நிருவாக விதிகள் அத்தியாயம் X இன் பிரிவு 193 | மீளாய்வாண் டிற்கான உள்ளபடியான வருமானம் மற்றும் செலவு தொடர்பான விபரங்கள் வரவு செலவுத் திட்டத்துடன் ஒப்பிடப்பட்டு முரண்பாட்டுக் கான விளக்கங்களை உள்ளடக்கிய கூற்று தயாரிக்கப் பட்டு கணக்காய்வு க்குச் சமர்ப்பிக்கப்பட்டிரு க்கவில்லை. | மீளாய்வாண்டி ன் சேகரிக்கப் பட்ட வருமானம் மற்றும் மேற்கொள்ளப்ப ட்ட செலவீனம் என்பன வரவு செலவு திட்டத்துடன் ஒப்பீடு செய்யப்ப டுதல் வேண்டும். | ஏற்றுக் கொள்ளப்பட்டது |
| (இ) | IAI/2002/02 ஆம் இலக்க 2002 நவம்பர் 28 ஆந் திகதிய திறைசேரி சுற்றறிக்கை | கணனிகள் மற்றும் கணனி உதிரிப்பாகங்கள், கணனி மென்பொருட்கள் என்பவற்றை பதிவதற்கான தனியான பதிவேடுகள் பராமரிக்கப்பட்டிரு க்கவில்லை. | கணனி மற்றும் உதிரிப்பாகங்க ள் தொடர்பான தனியான பதிவேடு பேணப்படுதல் வேண்டும். | ஏற்றுக் கொள்ளப்பட்டது |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் வருமானத்தை விஞ்சிய செலவினம் ரூபா 1,601,133 ஆக இருந்ததுடன், அதற்கு நேரெதிராக முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 6,811,723 தொகையாக ஆக இருந்தமை நிதிவிளைவுகளில் ரூபா 8,412,856 பின்னடைவை காட்டுகின்றது.

### 2.2 வருமான முகாமைத்துவம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளுக்குரியதாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பிடப் பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவைகள் | மதிப்பிடப் பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவைகள் |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 4,150,000 | 13,550,280 | 1,612,376 | 11,937,904 | 3,675,000 | 13,076,123 | 1,138,219 | 11,937,904 |
| வாடகைகள் | 13,588,600 | 6,043,392 | 4,724,363 | 1,329,028 | 17,570,000 | 7,171,629 | 6,636,542 | 532,086 |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 2,835,000 | 3,121,463 | 3,121,463 | - | 2,120,000 | 2,339,146 | 2,335,414 | 3,734 |
| ஏனைய வருமானம் | 19,408,000 | 14,234,567 | 12,161,501 | 2,082,066 | 26,572,000 | 19,851,081 | 17,373,514 | 2,477,566 |

#### 2.2.2 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | நீண்ட காலமாக காணப்படும் வாடகைகள் மீதான நிலுவை ரூபா 469,920 தொகையை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வாடகை நிலுவை அறவீட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எதிர் காலத்தில் மேற்படி தவறு இடம்பெறா வண்ணம் நிவர்த்தி செய்யப்படும். |
| (ஆ) | மீளாய்வாண்டில் முத்திரை தீர்வையானது 2016 ஆம் ஆண்டிற்கான வருமானத்தையே அறவிட்டுள்ளது. இருந்தும், சபையானது 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுக்கான பெறவேண்டிய வருமானத்தை | பெற வேண்டிய முத்திரை தீர்வையானது வருமானக் கணக்குகளில் காட்டப்படுவதுடன் அதனை அறவீடு | எதிர் காலத்தில் மேற்படி தவறு இடம்பெறா வண்ணம் நிவர்த்தி செய்யப்படும். |

| | | | |
|---|---|---|---|
| | கணக்குகளில் காட்டாததுடன், உரிய காலத்திற்குள் அதனை அறவிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட் டிருக்கவில்லை. | செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | |
| (இ) | சோலைவரி<br>------------- | | |
| | பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன<br>(அ) பிரதேச சபையின் அதிகார எல்லைக்குள் 11 வட்டாரங்களின் கீழ் 09 கிராமங்களுக்கு சோலைவரி அறவிடு செய்வதற்குரிய நடவடிக்கைகள் சபையால் மந்தநிலையில் மேற்கொள்ளப்படவில்லை. | சபையின் சகல வட்டாரங்களிலும் சேலைவரி மதிப்பீடு செய்யப்பட்டு அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எதிர் காலத்தில் மேற்படி தவறு இடம்பெறா வண்ணம் நிவர்த்தி செய்யப்படும். |
| (ஈ) | JCB இயந்திரத்தின் பயன்பாடு<br>---------------------------------- | | |
| | பிரதேச சபைக்கு பொது நிர்வாக உள்ளூராட்ச்சி அமைச்சின் செயலானரினால் நன்கொடையாக வழங்கப்பட்ட குறித்த இயந்திரத்தின் பயன்பாடு தொடர்பான விடயங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது | | |
| | பிரதேச சபையானது மீளாய்வாண்டில் இவ்வியந்திரத்தினை 191.2 இயந்திர மணித்தியாலங்கள் பயன்படுத்தியுள்ளன. இதனடிப்படையில் எரிபொருள், இயந்திர திருத்தம், சாரதி சம்பளம் மற்றும் இயந்திரத்தின் கடன் மீளச்செலுத்தல் என்பன அடங்கலாக ரூபா 747,927 தொகை செலவிடப்பட்டுள்ளது. சபை வேலைகள் தவிர்ந்த ஏனைய வேலைகளுக்காக இவ்வியந்திரம் 714.1 இயந்திர மணித்தியாலங்கள் பயன்படுத்தப்பட்டதினால் ரூபா 120,625 தொகையை மாத்திரம் உழைத்துள்ளது. இச்செயற்பாட்டினை ஆய்வு செய்தால் வருடாந்தம் சபையானது ரூபா 627,302 தொகையை அண்ணளவாக இழக்கவேண்டி ஏற்படலாம். | JCB இயந்திரத்தினை சபைக்கு வருமானம் தரக்கூடிய வகையில் முறையாக முகாமை செய்தல் வேண்டும். | எதிர் காலத்தில் மேற்படி தவறு இடம்பெறா வண்ணம் நிவர்த்தி செய்யப்படும். |

| | | |
|---|---|---|
| (i) Excavator கொள்வனவு<br>----------------------------- | | |
| சபை நடவடிக்கைகளுக்காக 2017 ஆம் ஆண்டு சுமார் ரூபா 11 மில்லியன் பெறுமதியுடைய Excavator இயந்திரம் சபை நிதியும் LLDF கடன் திட்டத்தின் மூலம் ரூபா 8.7 மில்லியன் 9% வட்டிக்கு கடனும் பெற்று 5 வருடங்களுக்கு மாதாந்தம் ரூபா 181,843 செலுத்தப்பட வேண்டும் என்ற நிபந்தனையில் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது. இது சம்மந்தமாக 2018 ஆம் ஆண்டில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன. | கடன் அடிப்படையில் கொள்வனவு செய்யப்பட்ட Excavator இயந்திரம் வட்டியையும் செலுத்தக்கூடிய வகையில் வருமானம் உழைத்ததை உறுதிப்படுத்தல் வேண்டும். | ஏற்றுக்கொள்ளப்பட்டது. |
| (அ) ஏப்ரல் 2017 இல் இருந்து ஏப்ரல் 2019 வரை வட்டியும் முதலும் சேர்ந்து மொத்தம் ரூபா 4,729,918 செலுத்தப்பட்டுள்ளது. இதில் வட்டியாக ரூபா 1,430,000 செலுத்தப்பட்டுள்ள போதிலும், இதுவரை ரூபா 340,000 மட்டுமே வருமானமாக பெறப்பட்டுள்ளதுடன் மார்ச் 2022 வரை மேலும் மொத்தமாக ரூபா 6,364,505 வட்டியும் முதலும் சேர்ந்து செலுத்தப்பட வேண்டியிருக்கின்றது. இது மாதாந்தம் ரூபா 181,843 சம தவணைக் கட்டணங்களாக செலுத்தப்படவேண்டி யுள்ளது. | | |
| (ஆ) மாதாந்தம் ரூபா 566,000 வருமானம் பெறமுடியும் என இத்திட்ட கொள்வனவு முன்மொழிவு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள போதிலும், இதுவரை பெற்ற வருமானத்தின் படி ரூபா 15,000 மட்டுமே மாதாந்த வருமானமாக பெறப்பட்டுள்ளது. | குறிப்பிட்ட இயந்திர முன்மொழியும் போது காட்டப்பட்ட வருமானம் உழைத்தலை உறுதிப்படுத்தல் வேண்டும். | ஏற்றுக்கொள்ளப்பட்டது. |

| | | |
|---|---|---|
| (இ) இவ் இயந்திரம் கொள்வனவு செய்யப்பட்ட நோக்கத்திற்கு பயன்படுத்த முடியாத காரணத்தினால் சபையின் திண்மக்கழிவு முகாமைத்துவத்திற்கு மட்டுமே தற்போது பயன்படுத்தப்படுகின்றது. | இயந்திரம் கொள்வனவு செயற்பட்ட நோக்கத்திற்கு பயன்படுத்த வேண்டும். | ஏற்றுக்கொள்ளப்பட்டது. |
| (ஈ) சரியான முறையில் திட்டமிடப்படாத இக்கொள்வனவினால் சபை நட்டமடைந்ததுடன் மாதாந்தம் ஈடு கொடுக்கமுடியாத நிதி நெருக்கடியை எதிர்கொள்ளவேண்டி ஏற்பட்டுள்ளது. | குறிபிட்ட இயந்திரக் கொள்வனவு தொடர்பாக முறையான திட்டமிடல் மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டும். | ஏற்றுக்கொள்ளப்பட்டது. |
| (உ) சபை உடனடியாக பொருத்தமான மாற்றுத்திட்டத்தை விரைவில் எடுக்கத்தவறுமானால் இக் கொள்வனவிற்காக செலவிடப்பட்ட செலுத்தப்பட வேண்டியுள்ள மொத்தம் சுமார் 11 மில்லியன் தொகையும் வீண் விரையமாகும். | பொருத்தமான மாற்று திட்டத்தின் கீழ் விரைவில் எடுக்கப்பட்டு சபை நிதி வீண்விரயம் தவிர்க்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்ளப்பட்டது. |

2.2.3 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் தீர்வைகள்

மாகாண சபையின் பிரதம செயலாளர் மற்றும் அனைத்து அதிகாரிகளிடமிருந்து 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 1,639,841 தொகையான நீதிமன்ற தண்டப்பணம் பெறப்பட வேண்டியிருந்ததுடன் முத்திரைக் கட்டணம் கணக்கிடப்பட்டு கணக்கில் காட்டப்படவில்லை.

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) முத்திரை தீர்வைகள் <br> பிரதேச சபை அதிகார எல்லைக்குள் 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டு காலப்பகுதியில் அசைவற்ற காணிகள் கைமாற்றல்கள் மீதான முத்திரைத் தீர்வையை மட்டக்களப்பு மற்றும் கல்முனையில் அமைந்துள்ள மாவட்ட காணிப் பதிவாளர் | | |

| | | | |
|---|---|---|---|
| | திணைக்களத்தால் சேகரிக்கப்பட்டு கிழக்கு மாகாண திறைசேரியின் வருமானவரித் திணைக்களத்திற்கு செலுத்தப்பட்ட முத்திரை தீர்வையை உள்ளூராட்சி சபைகள் பெற்றுக்கொள்வது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன | | |
| (i) | கிழக்கு மாகாண சபையின் 2010 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க முத்திரை தீர்வை மாற்றல்கள் பிரிவு 03 இற்கு அமைய வருடாந்தம் முத்திரைத் தீர்வை அறவிடப்படவேண்டிய போதிலும், 2018 ஆம் ஆண்டு ஜனவரி தொடக்கம் திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலான காலப்பகுதிக்குரிய முத்திரைத் தீர்வைகள் பிரதேச சபையினால் கணக்கிடப்பட்டு பதிவாளர் நாயகத்திடமிருந்து உரிய காலத்திற்குள் அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | முத்திரை தீர்வையானது பிரதேச சபையினால் கணீப்பிடப்பட்டு பதிவாளர் நாயகத்தினால் இருந்து உரிய காலத்திற்குள் அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எதிர் காலத்தில் மேற்படி தவறு இடம்பெறா வண்ணம் நிவர்த்தி செய்யப்படும். |
| (ii) | கிழக்கு மாகாண இறைவரித் திணைக்களத்தால், கிழக்கு மாகாண சபைகள் 2008 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க வரிகளையும் கட்டளைகளையும் விதிப்பதற்கும் சேகரிப்பதற்குமான நிதி நியதிச் சட்டத்தின் 37 ஆம் சரத்துக்கமைய பிரதேச சபையின் அதிகார எல்லைக்குள் உள்ள அசைவற்ற ஆதனங்களை மாற்றுகையில் கிழக்கு மாகாண இறைவரித் திணைக்களத்தினால் 2016, 2017 மற்றும் 2018 திசெம்பர் மாதம் வரையான காலப்பகுதியில் நேரடியாகவும் நடமாடும் சேவைகள் மூலமாகவும் அறவிட்ட மேலதிக முத்திரை தீர்வை தொடர்பில் ஆதன உரிமையாளர்களால் கிழக்கு மாகாண இறைவரி திணைக்களத்திற்கு செலுத்தப்பட்ட முத்திரை தீர்வை கணக்கிடப்பட்டு அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை | மேலதிக முத்திரை தீர்வை தொடர்பில் ஆதன உரிமையாளர்களால் கிழக்கு மாகாண இறைவரித் திணைக்கத்திற்கு செலுத்தப்பட்ட முத்திரை தீர்வை கணக்கீடப்பட்டு அறிவட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எதிர் காலத்தில் மேற்படி தவறு இடம்பெறா வண்ணம் நிவர்த்தி செய்யப்படும். |

| | | | |
|---|---|---|---|
| (iii) | முத்திரை தீர்வையானது பிரதேச சபைக்கு கிடைக்கவேண்டிய வருமானமாகும். இருந்தும், 2018 ஆம் ஆண்டு காலப்பகுதியில் கிழக்கு மாகாண இறைவரி திணைக்களத்தினால் மேலதிகமாக அறவிடப்பட்ட முத்திரை தீர்வை ரூபா 363,000 தொகை கணக்காய்வுத் திகதியான 10 மே 2019 வரை பிரதேச சபைக்கு கிடைக்கப்பெறவில்லை. இதனால், மேலதிக முத்திரை தீர்வை மற்றும் காணி விற்பனை தீர்வை வருமானங்கள் வருடாவருடம் கிடைக்கப்பெறாது இழக்கப்படுகின்றன. | காணி விற்பனை தீர்வை வருமானங்கள் வருடா வருடம் கிடைப்பதனை உறுதிப்படுத்தல் வேண்டும். | எதிர் காலத்தில் மேற்படி தவறு இடம்பெறா வண்ணம் நிவர்த்தி செய்யப்படும். |

3. செயற்பாட்டு மீளாய்வு
----------------------------

3.1 செயலாற்றல்
----------------

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆம் பிரிவின் பிரகாரம், பொதுச் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொது வழிகள், மற்றும் மக்களின் சுகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியதாக இருந்த பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பில் அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | உப விதிகள் | | |
| | 1987 ஆம் ஆண்டின் 15 இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 126 ஆம் பிரிவின் பிரகாரம், பிரதேச சபையின் வருமானம் மற்றும் ஒழுங்கமைப்புக்காக முக்கிய விடயங்கள் தொடர்பில் உபவிதிகள் தயாரிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டிருக்க வேணடும். இருந்தும், பிரதேச சபையினால் 2012 ஆகஸ்ட் 04 ஆம் திகதியில் சபையினால் உப விதிகள் தொடர்பான பிரேரணைகள் கிழக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சரின் அங்கீகாரத்திற்கு அனுப்பப்பட்ட போதிலும், 2018 திசெம்பர் 31 வரையிலும் அவற்றிக்கான அனுமதியைப் | சபையின் உப விதிகள் கிழக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சரின் அனுமதி பெற நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எதிர் காலத்தில் மேற்படி தவறு இடம்பெறா வண்ணம் நிவர்த்தி செய்யப்படும். |

| | | | |
|---|---|---|---|
| | பெற்று நடைமுறைப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட் டிருக்கவில்லை | | |
| (ஆ) | செயல் நடவடிக்கைத் திட்டம்<br>-----------------------------------------------<br>உப விதிகளின் பிரகாரம் சபையினால் செயல்படுத்தப்பட்டிருக்க வேண்டிய செயற்பாடுகள் தொடர்பில் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | சபையினால் செயற்படுத்தப்பட்டிருக் க வேண்டியெ செயற்பாடு தொடர்பில் வருடாந்த செயல் நடவடிக்கை திட்டம் ஒன்று தயாரிக்கப்ப ட்டிருக்க வேண்டும். | எதிர் காலத்தில் மேற்படி தவறு இடம்பெறா வண்ணம் நிவர்த்தி செய்யப்படும். |
| (இ) | நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிராமை<br>-----------------------------------<br>மக்களுக்கு தேவையான அடையாளப்படுத்தப்பட்டு முன்மொழியப்பட்ட மூன்று செயற்திட்டங்கள் தொடர்பாக நிதி ஏற்பாடு செய்யப்பட்டிருத்தல் வேண்டும். | மக்களுக்கு தேவையான செயற்திட்டங்கள் அடையாளப்படுத்தப் பட்டு அதற்கான நிதி ஏற்காடு செயற்படுதல் வேண்டும் | எதிர் காலத்தில் மேற்படி தவறு இடம்பெறா வண்ணம் நிவர்த்தி செய்யப்படும். |
| (ஈ) | திண்மக் கழிவு முகாமைத்துவம்<br>----------------------------------- | | |
| | (i) திண்மக்கழிவு முகாமைத்துவத்தை அபிவிருத்தி செய்யும் திட்டங்கள் செயற்படுத்தப் பட்டிருக்க வேண்டும். | திண்மக்கழிவு முகாமைத்துவத்தை அபிவிருத்தி செயற்திட்டங்கள் முன்மொழியப்பட்டு செயற்படுத்தப்பட வேண்டும் | எதிர் காலத்தில் மேற்படி தவறு இடம்பெறா வண்ணம் நிவர்த்தி செய்யப்படும். |
| | (ii) திண்மக்கழிவு முகாமைத்துவத்தின் ஊடாக வருமானத்தை உருவாக்கும் திட்டங்கள் முன் மொழியப்பட வேண்டும். | சபையினால் வருமானம் ஈட்டும் வகையில் செயற்திட்டங்கள் முன்மொழியப்பட வேண்டும். | எதிர் காலத்தில் மேற்படி தவறு இடம்பெறா வண்ணம் நிவர்த்தி செய்யப்படும். |
| | (ii) கழிவுகளை துகள்களாக அரைக்ககூடிய இயந்திரங்கள், வாழைமரங்களை அரியும் இயந்திரங்கள் மற்றும் கழிவுகளை தரப்படுத்தும் இயந்திரங்கள் போன்றவற்றை | வருமானத்தை அதிகரிக்க கூடிய வகையில் கழிவு அகற்றல் செயற்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப் பட வேண்டும். | எதிர் காலத்தில் மேற்படி தவறு இடம்பெறா வண்ணம் நிவர்த்தி செய்யப்படும். |

| | | | |
|---|---|---|---|
| | கொள்வனவு செய்து பயன்படுத்தினால் வருமானத்தை அதிகரிக்க முடியும். | | |
| (உ) | நிலைபேறான அபிவிருத்தி இலக்கு<br>---------------------------------<br>ஐக்கிய நாடுகள் அமைப்பின் அங்கத்துவ நாடுகளின் அரச தலைவர்களின் தலைமையில் 2015 ஆம் ஆண்டு நிலைபேறான அபிவிருத்தி மகாநாட்டில் தீர்மானிக்கப்பட்டதன் பிரகாரம் சபையினால் 2030 ஆம் ஆண்டு அறிந்து கொள்ள வேண்டிய அபிவிருத்தி நிகழ்ச்சி தொடர்பான அளவிடுவதற்கான குறி காட்டிகளை உருவாக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2030 ஆம் ஆண்டு அபிவிருத்தியினை அடையக்கூடிய வகையில் நிகழ்ச்சி திட்டங்கள் உருவாக்கப்பட்டு நடைடுறைப்படுத்தப் பட வேண்டும். | எதிர் காலத்தில் மேற்படி தவறு இடம்பெறா வண்ணம் நிவர்த்தி செய்யப்படும். |

3.4 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| | --------------------------------- | ----------- | ------------------- |
| (அ) | பிரதேச சபையின் அதிகாரத்திற்குட்பட்ட இடங்களில் உள்ள காணிகள் மற்றும் நிர்மாணிக்கப்பட்ட வீடுகள், கட்டிடங்கள் என்பன குறிப்பிடப்பட்டுள்ள போதிலும், இதற்கான திண்மக்கழிவு நடைமுறை (Solid waste Management) பின்பற்றப்பட வேண்டும். | திண்மக்கழிவு முகாமைத்துவத்தின் ஊடாக வருமானத்தை உருவாக்கும் திட்டங்கள் முன்மொழியப்பட வேண்டும். | ஏற்றுக் கொள்ளப்பட்டது. |
| (ஆ) | குத்தகைக்கு சொத்துக்களை பெற்றவர்களிடமிருந்து குத்தகைப் பிணை பெறப்படவில்லை. | குத்தகைக்கு சொத்துக்களை பெற்றவர்களிடமிருந்து குத்தகைப் பிணை பெறப்பட வேண்டும். | ஏற்றுக் கொள்ளப்பட்டது. |
| (இ) | 1987 ஆம் ஆண்டின் 15 இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 154 ஆம் பிரிவின் பிரகாரம், குறித்த சில காணிகள் விற்பனை மீது 1% சதவீத விற்பனை வரி | குறித்த சில காணிகள் விற்பனை மீது 1% சதவீத விற்பனை வரி அறிவிடப்படவேண்டிய போதிலும், 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் | ஏற்றுக் கொள்ளப்பட்டது. |

| | |
|---|---|
| அறிவிடப்படவேண்டிய போதிலும், 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் விற்பனை செய்யப்பட்ட காணிகள் தொடர்பில் நடவடிக்கை யெடுத்திருக்கவில்லை. | விற்பனை செய்யப்பட்ட காணிகள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

3.5.1 சொத்துக்களை பதிவேட்டிற்கு உட்படுத்தாமை

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| அசையும் மற்றும் அசையா சொத்துக்களை நிலையான சொத்துப் பதிவேடுகளில் பதிவதற்கு சபையால் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | உரிய பதிவேடுகள் பேணப்படல் வேண்டும். | எதிர் காலத்தில் மேற்படி தவறு இடம்பெறா வண்ணம் நிவர்த்தி செய்யப்படும். |

3.5.2 பராமரிப்பு மற்றும் திருத்தங்களினை மேற்கொள்ளாமை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | பிரதேச சபையினால் பயன்படுத்தப்படாது காணப்படும் சொத்துக்களை திருத்துவதற்கு அல்லது ஏலத்தில் விற்பனை செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | 03 ஆண்டுகளுக்கு மேலாக திருத்தம் செய்யக்கூடிய அல்லது திருத்தமுடியாத நிலையில் காணப்படுகின்றது. இவற்றை திருத்துவதற்கு அல்லது ஏலத்தில் விற்பனை செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டும். | ஏற்றுக் கொள்ளப்பட்டது. |
| (ஆ) | பிரதேச சபையின் களஞ்சிய அறையில் பல்வேறுபட்ட சொத்துக்கள் மற்றும் இருப்பு பொருட்கள் பாவனைக்கு உகந்த மற்றும் பாவனைக்கு உதவாத பொருட்கள் என பலவகையான பொருட்கள் காணப்படுகின்ற | களஞ்சிய அறையில் பொருட்கள் பாவனைக்குகந்த உதவாத திருத்தம் செய்து பயன்படுத்தக்கூடிய பொருட்கள் என ஒழுங்குபடுத்தி பாதுகாப்பான முறையில் வைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டும். | ஏற்றுக் கொள்ளப்பட்டது. |

| | | |
|---|---|---|
| போதிலும், அவற்றை அடையாளப்படுத்தி திருத்துவதற்கு அல்லது கழித்து விடுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படாததுடன், இவ்வாறாக திருத்தம் செய்து பயன்படுத்தக்கூடிய பொருட்களை ஒழுங்குபடுத்தி பாதுகாப்பான முறையில் வைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | | |

### 3.5.3 வருடாந்த பொருள் இருப்பு மெய்மையாய்வு

மீளாய்வாண்டிற்கான வருடாந்த பொருள் இருப்பு மெய்மையாய்வானது பிரதேச சபையினால் நியமிக்கப்பட்ட மூன்று உத்தியோகத்தர்கள் அடங்கிய மெய்மையாய்வுக் குழுவினால் 2019 ஜனவரி 30, 31 மற்றும் பெப்ரவரி 01 ஆம் திகதி ஆகிய தினங்களில் நடைபெற்றுள்ளதுடன் இதற்கான கொடுப்பனவாக ரூபா 6,000 தொகையும் கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது. இவ் மெய்மையாய்வு தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | வருடாந்த பொருள் இருப்பு மெய்மையாய்வு செய்வதற்காக நியமிக்கப்பட்ட உத்தியோகத்தர்கள் பொருட்களின் உண்மை இருப்பு நிலையை உறுதிப்படுத்தும் வகையில் இருப்பு பதிவேட்டுடன் ஒப்பிட்டு கணிப்பிடப்பட்டது என்பதை வெளிப்படுத்தும் வகையில் இருப்புபதிவேட்டில் அடையாளமிட்டு, உறுதிப்படுத்தி கையொப்பம் இடப்பட்டிருக்கவில்லை. | இருப்பு பதிவேட்டுடன் ஒப்பிட்டு கணிப்பிடப்பட்டது என்பதை வெளிப்படுத்தும் வகையில் இருப்புபதிவேட்டில் அடையாளமிட்டு, உறுதிப்படுத்தி கையொப்பம் இடப்பட்டிருக்க வேண்டும். | ஏற்றுக் கொள்ளப்பட்டது. |
| (ஆ) | மீளாய்வாண்டிற்கான வருடாந்த பொருள் இருப்பு மெய்மையாய்வானது 2018 திசெம்பர் 31 ஆம் திகதியை அடிப்படையாக கொண்டு மேற்கொள்ள வேண்டும். மேலும், இத் திகதிக்கு பின்னர் நடைபெற்ற பெற்றுக்கொள்ளல் மற்றும் வழங்கல்கள் தொடர்பில் சீராக்கங்கள் செய்யப்பட்டு இறுதி பொருள் இருப்பு | இறுதி பொருள் இருப்பு கணிப்பிடப்படவேண்டிய போதிலும், இச்செயற்பாடுகள் தொடர்பில் கணிப்பீடுகள் கவனத்தில் கொள்ளப்படாது இருப்பு மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட வேண்டும். | ஏற்றுக் கொள்ளப்பட்டது. |

| | | | |
|---|---|---|---|
| | கணிப்பிடப்படவேண்டிய போதிலும், இச்செயற்பாடுகள் தொடர்பில் கணிப்பீடுகள் கவனத்தில் கொள்ளப்படாது இருப்பு மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. | | |
| (இ) | வருடாந்த பொருள் இருப்பு மெய்மையாய்வுக் குழுவினால் சான்றுறுதி செய்யப்பட்ட போது 47 ஆம் படிவத்தில் “S” என அடையாளமிடப்பட்டு சுட்டிக்காட்டப்பட்ட பொருட்கள் தொடர்பில் கணக்காய்வுத் திகதியான 2019 மே 09 ஆம் திகதியில் மெய்மையாய்வு செய்தபோது இவ்வாறு அடையாளமிடப்பட்ட பொருட்களின் எண்ணிக்கையில் வேறுபாடு காணப்பட்டுள்ளது. | 2019 மே 09 ஆம் திகதியில் மெய்மையாய்வு செய்தபோது இவ்வாறு அடையாள மிடப்பட்ட பொருட்களின் எண்ணிக்கையில் வேறுபாடு காணப்பட்டுள்ளது. | ஏற்றுக் கொள்ளப்பட்டது. |
| (ஈ) | வருடாந்த பொருள் இருப்பு மெய்மையாய்வுக் குழுவினால் திறைசேரி மற்றும் கணக்காய்வு – 66 என்ற படிவத்தில் பயன்படுத்தப்படுகின்ற பொருட்கள் வெளிக்காட்டப்படவேண்டும். இருந்தும், இவ் மெய்மையாய்வுக்கு குழுவினால் மேற்படி படிவத்தில் வெளிப்படுத்தப்படவேண்டிய பொருட்கள் மற்றும் பொது 47 படிவத்தில் காட்டப்படவேண்டிய பொருட்கள் என பிரித்து மெய்மையாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. (உதாரணமாக) திருத்த முடியாத நிலையில் நீண்டகாலமாக உள்ள கருவிகளாக கருதப்பட்டு மெய்மையாய்வில் வெளிக்காட்டப்பட்டுள்ளது | பொது 47 படிவத்தில் காட்டப்படவேண்டிய பொருட்கள் என பிரித்து மெய்மையாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. (உதாரணமாக) திருத்த முடியாத நிலையில் நீண்டகாலமாக உள்ள கருவிகளாக கருதப்பட்டு மெய்மையாய்வில் வெளிக்காட்டப்பட வேண்டும். | ஏற்றுக் கொள்ளப்பட்டது. |

3.6 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

---------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

3.6.1 தெருவிளக்கு கொள்வனவு மற்றும் வழங்கல்

-------------------------------------------------------

பிரதேச சபையானது மீளாய்வாண்டில் ரூபா 457,900 தொகைக்கு தமது அதிகார எல்லைக்குள் தெருவிளக்குகளை பொருத்துவதற்காக மின்சார பொருட்களை கொள்வனவு செய்தது. இச் செயற்பாடு தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டது.

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| | ---------------------------------- | ----------- | ------------------------- |
| (அ) | வீதிகளில் மின்விளக்குகளை பொருத்துவதற்கான தேவைகள் குறித்து மக்களிடமிருந்து முறைப்பாடுகள் மற்றும் கோரல்கள் குறைந்த அளவில் பெறப்பட்ட போதிலும், சபையில் தெருவிளக்குகளை கொள்வனவு செய்வதற்கான அனுமதி பெறப்பட்டுள்ளது. மக்களினால் கோரப்பட்ட தேவைகளுக்கு ஏற்ப இக் கொள்வனவுகள் மேற்கொள்ளப்படவேண்டும். | மக்களினால் கோரப்பட்ட தேவைகளுக்கு ஏற்ப இக் கொள்வனவுகள் மேற்கொள்ளப் படவேண்டும். | எதிர் காலத்தில் மேற்படி தவறு இடம்பெறா வண்ணம் நிவர்த்தி செய்யப்படும். |
| (ஆ) | வீதிகளில் பொருத்தப்படுகின்ற 100 LED, 100 Street Light மின்குழிழ்கள் ஒவ்வொன்றும் ரூபா 1,450 தொகைக்கு கொள்வனவு செய்யப்பட்டுள்ளது. இருந்தும், மட்டக்களபபு மாநகர சபை மற்றும் ஏனைய பிரதேச சபைகளுடன் ஒப்பிடும் போது தங்கள் பிரதேச சபையினால் கொள்வனவு செய்யப்படுகின்ற மின்குழிழ்களின் மின்வலுவும் விலையும் அதிகளவிலே காணப்படுகின்றது. | மட்டக்களபபு மாநகர சபை மற்றும் ஏனைய பிரதேச சபைகளுடன் ஒப்பிடும் போது தங்கள் பிரதேச சபையினால் கொள்வனவு செய்யப்படுகின்ற மின்குழிழ்களின் மின்வலுவும் விலையும் அதிகளவிலே காணப்படுகின்றது. | எதிர் காலத்தில் மேற்படி தவறு இடம்பெறா வண்ணம் நிவர்த்தி செய்யப்படும். |
| (இ) | வீதிக்கான விளக்குகளை கொள்வனவு செய்வதற்கு சபையினால் ஒவ்வொரு வருடமும் வரவு செலவுத்திட்டத்தில் ஒதுக்கப்படுகின்ற நிதியில் நிதி செலவு செய்யப்படுவதுடன், மீளாய்வாண்டில் சபையின் தவிசாளர் மற்றும் உறுப்பினர்களின் தனிப்பட்ட விருப்பங்களின் அடிப்படையில் இவை கொள்வனவு செய்யப்பட்டு பொருத்தப்பட்டுள்ளது. | மீளாய்வாண்டில் சபையின் தவிசாளர் மற்றும் உறுப்பினர்களின் தனிப்பட்ட விருப்பங்களின் அடிப்படையில் இவை கொள்வனவு செய்யப்பட்டு பொருத்தப்பட வேண்டும். | எதிர் காலத்தில் மேற்படி தவறு இடம்பெறா வண்ணம் நிவர்த்தி செய்யப்படும். |

3.7 பெறுகை

----------

3.7.1 பெறுகைத் திட்டம்

-----------------------

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்கான பெறுகைகள் திட்டமானது பிரதேச சபையினால் வழங்கல்கள் மற்றும் சேவைகள் செயற்பாடுகளுக்காக தயாரிக்கப்பட்டிருக்க வேண்டும். இருந்தும், சபையினால் வழங்கல்களுக்காக ஒரு பெறுகைகள் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்காததுடன், சேவைகளுக்காக சபையினால் தயாரிக்கப்பட்ட பெறுகைகள் திட்டமானது தயாரிக்கப்பட்டதற்கான அடிப்படை ஆவணம், முன்மொழிவுகள், உள்ளூராட்சி மன்றங்களின் 4 வருட அபிவிருத்தி திட்டங்களின் முன்மொழிவுகளின் உள்ள சேவைகள் என்பன பின்பற்றப்படாது திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. | உள்ளூராட்சி மன்றங்களின் 4 வருட அபிவிருத்தி திட்டங்களின் முன்மொழிவுகளின் உள்ள சேவைகள் என்பன பின்பற்றப்பட்டு திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். | எதிர் காலத்தில் மேற்படி தவறு இடம்பெறா வண்ணம் நிவர்த்தி செய்யப்படும். |

3.7.2 வழங்கல்கள் மற்றும் சேவைகள்

----------------------------------------

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| இரண்டாம் தர சுகாதார திட்டத்தின் கீழ் குப்பைகளை சேகரிக்கும் கொள்கலன் மற்றும் மீள் பாவிக்கக்கூடிய குப்பைகளை சேகரிக்கும் பைகளை அரச நிறுவனங்கள் மற்றும் பொதுமக்களுக்கு விநியோகிக்கும் பொருட்டு நிதிஒதுக்கீடு செய்யப்பட்ட போதிலும், சபையானது ரூபா 143,928 தொகைக்கு 200 குப்பைகளை சேகரிக்கும் பிளாஸ்டிக் கொள்கலன் மாத்திரம் கொள்வனவு செய்யப்பட்டு அரசநிறுவனங்களுக்கு மாத்திரம் வழங்கப்பட்டுள்ளது. | குப்பைகளை சேகரிப்பதற்காக கொள்வனவு செய்யப்பட்ட 200 குப்பைகள் சேகரிக்கும் பிளாஸ்ரிக் கொள்கலன்கள் அரச நிறுவனங்களுக்கு மாத்திரம் அல்லாது பொதுமக்களுக்கும் விநியோகிக்க வேண்டும். | எதிர் காலத்தில் மேற்படி தவறு இடம்பெறா வண்ணம் நிவர்த்தி செய்யப்படும். |

4. கணக்களிப் பொறுப்பும் நல்லாழுகையும்

4.1 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் சபையில் உள்ளக கணக்காய்வு நடவடிக்கைகள் நடைபெற்றிருக்கவில்லை | மீளாய்வாண்டில் சபையில் உள்ளக கணக்காய்வு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | எதிர் காலத்தில் மேற்படி தவறு இடம்பெறா வண்ணம் நிவர்த்தி செய்யப்படும். |

4.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்கள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் சபையினால் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்கள் ஆரம்பிக்கப்பட்டு குழுக் கூட்டங்கள் நடைபெற்றிருக்கவில்லை. | மீளாய்வாண்டில் சபையினால் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்கள் ஆரம்பிக்கப்பட்டு குழுக் கூட்டங்கள் நடைபெற்றிருக்க வேண்டும். | எதிர் காலத்தில் மேற்படி தவறு இடம்பெறா வண்ணம் நிவர்த்தி செய்யப்படும். |

5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கீழ்வரும் கட்டுப்பாட்டு விடயங்கள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| கட்டுப்பாடுகள் | விசேட கவனம் செலுத்த வேண்டிய விடயங்கள் | | |
|---|---|---|---|
| (அ)வருமான முகாமைத்துவம் | வருமான நிலுவைகளை அறவிட நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | வருமான நிலுவைகளை அறவிட நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் | |
| (ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு | பாதீடு தயாரிக்கப்படும் போது கடந்த கால உண்மையான செலவுகள் கவனத்தில் கொள்ளப்படுதல் வேண்டும். | பாதீடு தயாரிக்கப்படும் போது கடந்த கால உண்மையான செலவுகள் கவனத்தில் கொள்ளப்படுதல் வேண்டும். | எதிர் காலத்தில் மேற்படி தவறு இடம்பெறா வண்ணம் நிவர்த்தி செய்யப்படும். |

| | | |
|---|---|---|
| (இ) நிலையான சொத்துக் கட்டுப்பாடு | (i) நிலையான சொத்துப் பதிவேடு பேணப்படுதல் வேண்டும்.<br><br>(ii)சபையில் பயன்படுத்தப்படாது விளைவற்றுக் காணப்படும் நிலையான சொத்துக்களை பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | நிலையான சொத்துப் பதிவேடு பேணப்படுதல் வேண்டும்.<br><br>சபையில் பயன்படுத்தப்படாது விளைவற்றுக் காணப்படும் நிலையான சொத்துக்களை பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |